www.Padasalai.Net S **மூன்றாம் திருப்புதல் தேர்வு 2024** www.Trb Tnpsc.com

# பத்தாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக **15×1=15**

1) மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெருங் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2) பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க
அ) கொண்டல் - 1. மேற்கு
ஆ) கோடை - 2. தெற்கு
இ) வாடை - 3. கிழக்கு
ஈ) தென்றல் - 4. வடக்கு
அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3,4,1,2

3) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடரில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவமஉருபு ஈ) உரிச்சொல்

4) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

5) அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

6) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர் - இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?
அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்
ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது
இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது
ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்

7) சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

8) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும்
பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
அ) உதியன் : சேரலாதன் ஆ) அதியன் : பெருஞ்சாத்தன்
இ) பேகன் : கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் : திருமுடிக்காரி

9) பாடி மகிழ்ந்தனர் - எவ்வகைத் தொடர் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்
அ) பெயரெச்சத் தொடர் ஆ) வினையெச்சத் தொடர்
இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர்

10) 'சாகும்போது தமிழ் படித்துச்சாக வேண்டும்' என்று கூறியவர்
அ) தமிழழகனார் ஆ) பாவாணர் இ) சச்சிதானந்தன் ஈ) மறைமலையடிகள்

11) "சங்க இலக்கியங்கள் ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன" இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான வரியைக் கண்டறிக.
அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை - நல்வினை, தீவினை
ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - உயர்திணை, அஃறிணை
இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் - அறம், பொருள், இன்பம்
ஈ) குறிஞ்சி, முல்லை, மலை, காடு, வயல் - பனை, திணை

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

For Answer search this - @vskteaches - in YouTube
www.vskteaches.xyz

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி

"நனைந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

12) இப்பாடல் இடம்பெற்ற நூல்
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

13) நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்
அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம் இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

14) பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்
அ) பெரும்பெயல், பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்
இ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த

15) பாடலில் இடம் பெற்றுள்ள அளபெடை
அ) தடக்கை ஆ) வளைஇ இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
வினா எண். 21-க்கு கட்டாயம் விடையளிக்கவும்:- **4×2=8**

16) விடைக்கேற்ற வினா எழுதவும்
அ) செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
ஆ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்

17) குறிப்பு வரைக: அவையம்

18) "சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்" - இக்கவிதை அடிகள் உணர்த்தும். உள்ளழகை எழுதுக.

19) "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

20) பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

21) மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப்போரைக் காணும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- **5×2=10**

22) 'ஒலித்து' பகுபத உறுப்பிலக்கணம் தருக.

23) கலைச்சொல் தருக. அ) Patent ஆ) Storm
குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா
மேகலை, பொன், விலங்கு, மழை, தேன் - சொற்களை இணைத்து எழுதுக.

24) கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
அ) உழவர்கள் மலையில் உழுதனர்
ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்

25) பாடாண்திணை - குறிப்பு வரைக.

26) அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள்.
(தனிச்சொற்றொடரை கலவைத்தொடராக மாற்றுக)

27) எதிர்மறையான சொற்கள் எழுதுக. அ) அருகில் அமர்க ஆ) மீளாத்துயர்

28) குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

For Answer search this - @vsktEaches - in YouTube
www.Padasalai.Net
www.vskteaches.xyz
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **2×3=6**

29) ஜெயகாந்தனின் தர்க்கத்திற்கு அப்பால் சிறுகதையின் கதைமாந்தர் ஒருவரின் சிறப்புக்கூறு ஒன்றினைக் குறிப்பிட்டு எழுதுக.

30) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிபடக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

அ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?

ஆ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?

இ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

31) காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த உங்கள் கருத்துகள் மூன்றினை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

வினா எண். 34 கட்டாய வினா:- **2×3=6**

32) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33) வைத்தியநாதபுரி முருகன் அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

34) "வாளால் அறுத்துச்" எனத் தொடங்கும் பாடல் (அல்லது) "மாற்றம்" எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு - 3

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:- **2×3=6**

35) தன்மையணி என்பதனை விளக்கி அதன் வகைகளைக் குறிப்பிடுக.

36) வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை? ஏதேனும் மூன்று வகை வினாக்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) வேலோடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு - இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- **5×5=25**

38) அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு ஒரு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (அல்லது)

ஆ) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக்கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக - கண்ணதாசன்

39) அ) மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

For Answer search this - @vsktaeches - in YouTube

www.vskteaches.xyz

www.Padasalai.Net

ஆ) சென்னையில் வசிக்கும் நீ, உன் நண்பனுக்கு 'மிக்ஜாம் புயல்' பாதிப்பு பற்றியும், அரசு எடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் கடிதம் எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) மதுரை சிந்தாமணியில் வசிக்கும் ராமசாமி மகள் கல்பனா என்பவர் அப்பகுதியில் உள்ள கிளை நூலகத்தில் தந்தை கொடுத்த ரூபாய் 400ஐக் கொண்டு தன்னை உறுப்பினராக சேர உரிய படிவம் பூர்த்தி செய்க.

42) அ) தம்பி உனக்குப் பிடிச்ச காய் சொல்லு- கேரட்

பிடிச்ச பழம் - ஆப்பிள்

பிடிச்ச காலை உணவு - நூடுல்ஸ்

மத்தியானத்துக்கு - ப்ரைடு ரைஸ்

இரவுக்கு - பீட்சா அல்லது பாஸ்தா

இது ஏதோ ஆங்கிலப் படத்திடன் வசனம் அல்ல, சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர் என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டுமொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டுவிட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும், சாம்பார் சாதமும், கத்திரிக்காய் பொறியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில் ஆம். காணாமல் போய்விடும். உங்கள் குழந்தைகள் ஆடு, மாடுகளைத் தவிர மனுசங்ககூடி கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும். மருத்துவர் கு.சி வராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்கள் பதில் என்னவாக இருக்கும்? (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

Malar: Devi, switch off the lights when you leave the room

Devi: Yaah, We have to save electricity.

Malar: Our nation spends a lot of electricity for lighting up our streets in the night,

Devi: Who knows? in future our country may launch artificial moons to light our night time sky!

Malar: I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi: Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power.

பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 3×8=24

43) அ) தமிழ்மொழியின் தொன்மை, இலக்கிய வளம், சொல் வளம் குறித்து ஒரு பக்க அ ளவில்எழுதுக. (அல்லது)

ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவரக்காரணங்கள் அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து ஒரு தலையங்கம் எழுதுக.

44) அ) மங்கையராய்ப் பிறப்பதற்கே - என்ற தலைப்பில் சாதனை மகளிர் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) கொக்கைப்போல - கோழியைப் போல - உப்பைப் போல - என்ற குறிப்புகளைப் பயன்படுத்தி ஒரு நாடகம் எழுதுக.

45) அ) "சான்றோர் வளர்த்த தமிழ்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதி தலைப்பு தருக.

முன்னுரை - நிலமாசுபாடு - நீர்மாசுபாடு - காற்று மாசுபாடு - மாசுபடக் காரணம் - மாசுநீக்கும் காரணிகள் - மக்களிடையே விழிப்புணர்வு - தீமைகள் - மாணவர்களின் பங்கு - முடிவுரை

********

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

For Answer search this - @vsktteaches - in YouTube

www.Padasalai.Net

www.vskteaches.xyz